# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு


பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண்** 8/2016 **நாள் : 14/06/2016**

**பெறுநர்**
மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள்
மத்திய அமைப்பின் அனைத்து கிளைச் செயலாளர்கள்
மத்திய அமைப்பின் மாநில செயற்குழு உறுப்பினர்கள்

---

அன்பான தோழரே,

வணக்கம்,

மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 11.06.2016 அன்று சென்னையில் மாநில தலைவர் தோழர் கே.விஜயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்ட சிஐடியூவின், துணை பொதுச்செயலாளர் தோழர். ஆர். கருமலையனன் அவர்கள் தனது உரையில் தேர்தலில் நாம் ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்க வகையில் இருந்தது. இருப்பினும் நாம் ஆற்றிய பணிகள் சம்மந்தமாக விவாதிக்க வேண்டியுள்ளது. சிஐடியூ வின் ராஞ்சி செயற்குழு முடிவின் படி இடது சாரி அங்கம் பெற்றுள்ள அணிகளை ஆதரிக்க வேண்டும் என்ற முடிவு மின் துறையில் அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் 2200 சட்டமன்ற உறுப்பினர்கள் மாநில கட்சிகளைச் சார்ந்தவர்களாக உள்ளனர்.

அதிமுக, திமுக இரண்டும் நவீன தாராளமயக் கொள்கைகளை அமல்படுத்துபவர்களே. மேலும் தனது உரையில் செப்டம்பர் 2 இல் வேலைநிறுத்தம் எல்லா அரங்கங்களும் முனைப்பாக பணியாற்ற வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார். நமது வேலை நிறுத்த பிரச்சாரத்தில் குறைந்த பட்ச ஊதியம், வேலையின்மை போன்ற பிரச்சனைகள் இடம் பெற வேண்டும். இதையொட்டி ஆகஸ்ட்டு 15 இல் பிரச்சார இயக்கத்தை நடத்த வேண்டும். துறை வாரியான கோரிக்கைகளை வைத்து இயக்கம் நடத்த வேண்டும் சி.ஐ.டி.யூ.வின் அகில இந்திய மாநாடு ஒடிஸா மாநிலம் பூரியில் நடைபெற உள்ளது.

சிஐடியூ வின் தமிழ் மாநில மாநாடு தூத்துக்குடியில் செப்டம்பர் 9 முதல் 12 வரை நடைபெற உள்ளது. சிஐடியூவின் மாவட்ட மாநாடுகளை சிறப்பாக நடத்த வேண்டும். மத்திய அமைப்பின் உறுப்பினர் எண்ணிக்கையை 2015 இல் உயர்த்தி இருக்கின்றோம் என்பன போன்றவற்றை குறிப்பிட்டு உரையாற்றினார்.

மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில தலைவர் தமது உரையில் செப்டம்பர் 2, அகில இந்திய வேலை நிறுத்தம், சிஐடியூ வின், மாவட்ட, மாநில மாநாடுகள். ஆகஸ்ட்டு 13,14,15,16 தேதிகளில் திருவண்ணாமலையில் நடைபெற உள்ள மின் ஊழியர் மத்திய அமைப்பின் 15 வது மாநில மாநாட்டையும் குறிப்பிட்டு உரையாற்றினார்.

அதன் பின்னர் மின் ஊழியர் மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் சென்ற நிர்வாகிகள், செயற்குழு கூட்டத்திற்கு பின்னர் நடைபெற்ற பணிகளை குறிப்பிடுவதற்கு முன்னர் தூத்துக்குடி மாவட்ட சிஐடியூ மாநாடு நடைபெற்று அதில் மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில துணைத் தலைவராக உள்ள தோழர் வை.பாலசுப்பிரமணியம் அவர்கள் மீண்டும் மாவட்ட செயலாளராக தேர்வு செய்யப்பட்டதற்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

தமிழகத்தில் தேர்தலுக்கு பின்னர் ஆட்சி அமைக்கப்பட்டு மின்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள மின்துறை அமைச்சரை சந்தித்ததையும் விளக்கினார்.

பின்னர் சமீபத்தில் தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் இடதுசாரிகள் அங்கம் பெற்றுள்ள தேமுதிக மக்கள் நலகூட்டணி த.மா.கா ஆகிய அணிகளுக்காக மின் ஊழியர் மத்திய அமைப்பு தோழர்கள் ஆற்றிய பணி, நிதி அளித்தது, பிரச்சாரத்திற்காக சிஐடியூ பிரசுரமும், நமது துண்டறிக்கை பயன்படுத்தியதையும் தமிழ்நாடு முழுவதும் 1000க்கும் மேற்பட்ட ஊழியர்கள் விடுப்பெடுத்து பணியாற்றியதையும் பரிசீலனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதை எடுத்துரைத்தார். மேலும் பிரச்சாரத்திற்காக மின் ஊழியர் மத்திய அமைப்பின் கலைக்குழு. அரசியல் விமர்சனத்தோடு தயாரிக்கப்பட்ட வீதி நாடகம் சென்னையில் பயன்படுத்தியது, அதற்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்ததையும் சுட்டிக் காட்டினார்.

தேர்தல் பணியின் சிறப்பு அம்சங்களை குறிப்பிட்ட அதே நேரத்தில் சில மாவட்டங்களில் வாய்ப்பிருந்து நாம் அதை பயன்படுத்த தவறியதையும், சுட்டிக்காட்டி அதை எதிர்காலத்தில் களையப்பட வேண்டிய அவசியத்தையும் விளக்கினார்.

பொதுவாக சென்ற பாராளுமன்ற தேர்தலில் நாம் ஆற்றியபணி, அளித்த நிதி இந்த சட்டமன்ற தேர்தலில் அதை இரட்டிப்பாக உயர்த்தியதையும் குறிப்பிட்டதோடு இந்த தேர்தலில் முனைப்பாக பணியாற்றியவர்களை தேர்ந்தெடுத்து அவர்களை அடுத்தக் கட்டத்திற்கு உயர்த்த வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

அடுத்து ஆகஸ்ட்டு 13 முதல் 16 வரை திருவண்ணாமலையில் நடைபெற உள்ள மாநில மாநாட்டு துவக்கப்பணிகளான விழுப்புரம் மண்டலக் குழுக்கூட்டம், வரவேற்புக்குழு அமைப்புக் கூட்டம் போன்றவைகள் நடைபெற்றதை விளக்கினார். மேலும் நடைபெற உள்ள மாநில மாநாடு சம்மந்தமாக பிரிதிநிதிகள் தேர்வுக்கான அடிப்படை ஆண்டு 2015 பிரதிநிதிகள் எண்ணிக்கை, பிரதிநிதிகள் கட்டணம், மாநாட்டையொட்டி கொடியேற்றுவது, பிரச்சாரத்தை கொண்டு செல்வது, மாநாட்டை யொட்டி கொண்டு வர உள்ள மலர், நடைபெற உள்ள கருத்தரங்குகள், மாநாட்டில் கலந்து கொள்ளும் தலைவர்களை இறுதிப்படுத்துவது, மாநாட்டு பேரணிக்கு 20,000 ஊழியர்களை திரட்டுவது போன்றவைகள் தொடர்பான ஒரு ஆலோசனை முன்வைத்தார்.

2015 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கை இறுதிப்படுத்தியது. மின் வாரிய ஊழியர்களின் மேலோங்கி உள்ள கோரிக்கைகளான 4273 மஸ்தூர்களை கள உதவியாளர்களாக பதவி உயர்வு கொடுப்பது. 933 கணக்கீட்டாளர்களுக்கு கணக்கீட்டு ஆய்வாளராக பதவி உயர்வு வழங்குவது ஊதிய உயர்வு, ஒப்பந்த தொழிலாளர் பிரச்சனை, பகுதி நேர ஊழியர்கள் கோரிக்கைகள் போன்றவைகள் சம்மந்தமாக நாம் எடுத்த நடவடிக்கை அதில் மஸ்தூர்களை கள உதவியாளர்களாக பதவி உயர்வு அளிப்பது, கணக்கீட்டாளர்களுக்கு கணக்கீட்டு ஆய்வாளராக பதவி உயர்வு அளிப்பது போன்றவைகள் சமீபத்தில் நடைபெற உள்ள வாரியக் கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெற்ற பின்னர்

உத்தரவாக வழங்க உள்ளதையும், மேலும் இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலையாக பதவி உயர்வு வழங்குவதில் உள்ள தேக்கத்தை களைந்து பதவி உயர்வு அளிக்க வாரியத்தை வற்புறுத்தி வருவதையும் குறிப்பிட்டார்.

மேலும் 2015 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையை இறுதிப்படுத்தியது நாம் தொடுத்த வழக்குகள் சம்மந்தமான விவரங்களை முன்வைத்தார்.

நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்ட மாநில நிர்வாகியான தோழர். ஆர்.சிவராஜ் திருவண்ணாமலையில் நடைபெற உள்ள மாநாட்டு தயாரிப்பு பணிகள் சம்மந்தமாக விளக்கினார்.

## தோழர்களின் விவாதங்களுக்கு பின்னர் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன.

1. நடைபெற்ற தேர்தல் பணி சம்மந்தமாக வட்ட வாரியாக நிர்வாகிகள் கூட்டத்தை நடத்தி பணிகள் சம்மந்தமாக முழுமையாக பரிசீலித்து மாநில மையத்திற்கு அறிக்கை அனுப்புவது. அறிக்கையின் விவரங்களை தொகுத்து செயற்குழுவிற்கு செல்வது.

2. ஊதிய உயர்வு,ஒப்பந்த தொழிலாளர் அடையாளங்காணுதல், பகுதிநேரஊழியர்கள் பதவிகள் அனுமதித்தல் கணக்கீட்டு ஊழியர்களின் பதவி உயர்வு, அனல் மின் நிலையங்களுக்கு பதவிகளை அனுமதிப்பது போன்ற கோரிக்கைகளை ஊழியர்கள் மத்தியில் பிரச்சாரமாக கொண்டு சென்று நடைபெற உள்ள மாநாட்டில் வலிமையான இயக்கத்திற்கு திட்டமிடுவது.

3. களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு சம்மந்தமாக 30.06.2015 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தை அடிப்படையில் காலதாமதமின்றி ஒப்பந்தம் வாரியத்தை வலியுறுத்துவது.

## **மத்திய அமைப்பின் 15 வது மாநில மாநாடு தயாரிப்பு சம்மந்தமாக கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன**

1. 2015 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கை அடிப்படையில் பிரதிநிதிகளை தேர்வு செய்வது.

2. 75 உறுப்பினர்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில் தேர்வு அமைய வேண்டும். மாநில நிர்வாகிகள் தவிர மற்ற அனைவரும் பிரதிநிதிகளாக தேர்வு செய்யப்பட்டுத்தான் மாநில மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும்.

3. தேர்வு செய்யும் பிரதிநிதிகளில் வட்டத்திற்கு ஒரு பெண் பிரதிநிதியும், ஒரு ஒப்பந்த தொழிலாளர் பிரதிநிதியும் உறுதி செய்யப்பட வேண்டும். ஒப்பந்த தொழிலாளர் பிரதிநிதியும், பெண் பிரதிநிதியும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரதிநிதிகள் எண்ணிக்கைக்குள்ளாகவே இருக்க வேண்டும்.

4. இவை தவிர மண்டலத்திற்கு ஒரு ஒப்பந்த தொழிலாளி பிரதிநிதியாக தேர்வு செய்யப்பட வேண்டும்.

5. பொறியாளர் அமைப்பிற்கு 10 பிரதிநிதிகளும்,ஓய்வு பெற்பெற்றோர் நல அமைப்புக்கு 5 பிரதிநிதிகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. பிரதிநிதிக் கட்டணமாக பிரதிநிதிக்கு ரூபாய் 650/- என்று நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது.

7. **மத்திய அமைப்பின் 15 வது மாநில மாநாட்டிற்கு**

(அ) சி.ஐ.டியு.வின் அகில இந்திய தலைவர் தோழர் ஏ.கே. பத்மநாபன் அவர்களும், இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பின் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் பிரசாத் நந்தினி சௌத்ரி, கேரள மாநில தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் லட்சுமணன், சி.ஐ.டியுவின் மாநில தலைவர் அ. சவுந்தரராஜன், பொதுச்செயலாளர் தோழர். ஜி.சுகுமாறன், மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் க. கனகராஜ் ஆகியோர்களை அழைப்பது என்றும்...

(ஆ) நடைபெற உள்ள கருத்தரங்கத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் டி.கே.ரங்கராஜன், மாதர் சங்கத்தின் தலைவர்களில் ஒருவரான தோழர் உ.வாசுகி ஆகியோர்களை அழைப்பது...

8. நடைபெற உள்ள பேரணிக்கு கேரள முதலமைச்சர் மாண்புமிகு தோழர் பினராய் விஜயன் அல்லது எரிசக்திதுறை அமைச்சர் மாண்புமிகு திரு.சுரேந்திரன் அவர்களை அழைப்பது

9. வாழ்த்துரையாக விவசாயிகள் சங்கம், போக்குவரத்து, உழைக்கும் பெண்கள், ஆகிய அமைப்புகளை அழைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

10 15வது மாநில மாநாட்டை குறிக்கும் வகையில் 20.07.2016 அன்று கோட்ட, வட்ட அலுவலகங்கள் முன்னால் 15 கொடிகள் ஏற்றி தட்டி, போர்டுகள் வைத்து சிறப்பான விளம்பர எற்பாட்டை செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

11. மாநில மாநாட்டின் நோக்கத்தையும், மின் ஊழியர் முன் உள்ள பிரச்சனைகளான ஊதிய உயர்வு, ஒப்பந்த தொழிலாளர் பணி நிரந்தரம் பகுதிநேர ஊழியர்கள் பதவிகள் அனுமதிப்பது போன்ற கோரிக்கைகளையும் விளக்கும் வகையில் 20.07.2016 முதல் 24.07.2016 வரை பிரச்சாரத்தை மேற்கொள்வது. பிரச்சாரத்தின் நிறைவு நாளான 24.07.2016 அன்று கோட்டமட்டத்தில் ஆர்ப்பாட்ட கூட்டங்கள் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

12. மாநாட்டின் பிரச்சாரத்திற்கு மின்ஊழியர் மத்திய அமைப்பின் கலைக்குழுவை பயன்படுத்துவது மற்றும் மத்திய அமைப்பின் 45 ஆண்டு கால சாதனைகளை விளக்கும் கண்காட்சி ஒன்று வைப்பது....

13. மாநாட்டு பேரணி 20,000 தோழர்களை திரட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

14. மாநில மாநாட்டையொட்டி மலர் ஒன்று வெளியிடுவது என்றும் மலர் பணிகளை மேற்கொள்ள கீழ்கண்டவாறு மலர்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

மலர்குழுவின் கன்வீனராக தோழர் எம். வெங்கடேசன் செயலாற்றுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

## மலர் குழு

1. தோழர் எம். வெங்கடேசன் (கன்வீனர்)
2. தோழர் து. கோவிந்தராஜு
3. தோழர் ஈ. அந்தோணி
4. தோழர் எஸ். ராஜேந்திரன்
5. தோழர் எம். தனலட்சுமி
6. தோழர் தி.ஜெயசங்கர்
7. தோழர் ஏ. பழனி
8. தோழர் ஆர்.குருவேல்
9. தோழர் டி. பழனிவேல்
10. தோழர் டி. ஸ்ரீதர்
11. தோழர் ஈ. மதுசூதனன்
12. தோழர் சி. ஜோதிமணி
13. தோழர் எம். பன்னீர் செல்வம்
14. தோழர் கே.ரவிசந்திரன்
15. தோழர் ஆ. பெருமாள் (தி.மலை)
16. தோழர் எம். தயாளன் (மத்திய சென்னை)
17. தோழர் எம். முருகானந்தம் (தென் சென்னை)
18. தோழர் எம். பால்ராஜ் (செங்கல்பட்டு)
19. தோழர் தி. அறிவழகன் (மதுரை)
20. தோழர் பீர்முகமதுஷா(திருநல்வேலி)
21. தோழர் எஸ். உமாநாத் (சிவகங்கை)

தோழர்களே,

மேற்கண்ட முடிவுகளை முனைப்பாக நிறைவேற்றி ஆகஸ்ட் திங்களில் நடைபெற உள்ள மின் ஊழியர் மத்திய அமைப்பு மாநாட்டை அனைத்து வகைகளிலும் சிறப்பான மாநாடகவும் இந்த மாநாட்டு திடலுக்கு வருவதற்கு முன்பாக மின் ஊழியர் மத்திய அமைப்பின் உறுப்பினர் எண்ணிக்கையை 30,000 ஆக உயர்த்திட நமது கிளைகள் முழுவீச்சுடன் செயல்பட வேண்டுகிறோம்

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

**மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில செயற்குழு கூட்டம் 07.07.2016 அன்று திருச்சியில் நடைபெறும்**

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**

**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 9/2016** **நாள் : 16 /06/2016**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்

## மத்திய அமைப்பின் மாநில செயற்குழு கூட்டம்
## 2016 ஜூலை 7 (வியாழன்) திருச்சி

அன்பான தோழரே! வணக்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் **2016 ஜூலை 7 -ல் வியாக்கிழமை) திருச்சி மாநகரில் கீழ்கண்ட முகவரியில் நடைபெற உள்ளது.**

**நடைபெறும் இடம்**
**வெண்மணி இல்லம்**
**சி.ஐ.டி.யூ. அலுவலகம்**
**கரூர் பைபாஸ் ரோடு திருச்சி - 620 002**

ஆகஸ்ட்டு மாதத்தில் நடைபெற உள்ள மாநாடு தொடர்பாக திட்டம் இடும் ஒருநாள் கூட்டம் ஆதலால் உறுப்பினர்கள் குறித்த நேரத்தில் அதாவது காலை 10.00 மணி அளவில் கலந்து கொள்ள வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

## நிகழ்ச்சி நிரல்

1. அஞ்சலி
2. தலைவர் உரை
3. சிஐடியு மாநிலக்குழு கூட்ட முடிவுகள்
4. நடைபெற்ற பணிகள்
5. தேர்தல்
6. மத்திய அமைப்பின் மாநில மாநாடு
7. களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு
8. 2015 ஆம் ஆண்டு உறுப்பினர் இறுதிப்படுத்துதல்
9. செப்டம்பர் 2, அகில இந்திய வேலை நிறுத்தம்
10. வரவு - செலவு
11. மத்திய அமைப்பு
    மின்கதிர்
    குடும்பநல பாதுகாப்பு
12. இதர பிரச்னைகள்

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்